மரபு, மரியாதை காப்பாற்றப்பட வேண்டும். இன்றைக்கு அவர் துண்டுப் பிரசுரங்களை வீசியிருக்கிறார்: அதுமட்டு மல்லாமல் தன்னுடைய குடும்பத்தையே, ஏதுமறியாத பெண்டு பிள்ளைகளையும் தூண்டிவிட்டு அந்தக் குற்றத்தைச் செய்யச் செய்திருக்கிறார். ஆகவே, ஒரு மாத கால தண்டனை என்பதுதான் பொருத்தமாக இருக்கும். அப்போதுதான் மற்றவர்களும் இம் மாதிரிக் குற்றம் செய்ய எண்ணம் ஏற்பட முடியாத நிலை ஏற்படும். ஆகவே, ஒரு மாதம் என்று தண்டனையை ஊர்ஜிதம் செய்வது நலமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவரை இப்போது பிடித்து வைத்திருந்தாலும் அவர் இன்னும் பேசிக் கொண்டேதான் இருக்கிறார். அதிலிருந்து அவர் தெளிவான மனமுடையவர் அல்ல என்று தெரிகிறது. அந்த வகையில் ஒரு மாதத்திற்குப் போகாமல், ஒரு வாரம் என்றும் இல்லாமல் 15 நாள் தண்டனை என்று கொடுப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து கோஷமிட்டுக் கொண்டு துண்டுப் பிரசுரங்களை அவைக்குள் வீசியெறிந்த ஜோரா பரசுராம் பிரபுவுக்கு 15 நாள் சாதாரணக் காவல் தண்டனை அளிப்பது குறித்து

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN: Sir, I move—'This House resolves that the person calling himself Jora Parasuram Prabhu who shouted slogans and threw some pamphlets from Speaker's Gallery on the floor of the House at 12-15 p.m. today, 19-4-1975 and who was taken into custody immediately thereafter, has committed a grave offence and is guilty of gross contempt of this House.

This House further resolves that he be sentenced to 15 days' simple imprisonment and be sent to the Central Jail, Madras.'

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சிறைக்கு அனுப்பப்படுவார்.